உ

கடவுள் துணை.

திரிசிரபுரம் உத்திரதிசை காவேரி நதியின்மத்தியில்
திருவானைக்காவென்னும் அப்புஸ்தலத்தில்
திருக்கோயிற்கொண்டெழுந்தருளியிராநின்ற
ஜம்புலிங்கமென்னும் சிவபெருமானிடப்பாகம்பெற்ற

அகிலாண்டீஸ்வரி பதிகம்.

சென்னை:

B. இரத்தின நாயகர் அண்டு ஸன்ஸ்
அவர்களது
திருமகள் விலாச அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1923.

உ

சிவமயம்.

அகிலாண்டீஸ்வரி பதிகம்.

தொல்லையோயுந்தனுக்குத் தோன்றிலையோ வென்க
இல்லையோதெய்வ மிருந்தாலிரங்காதோ [வலை
முல்லையுடன்வில்வவன முத்திதருஞ்சம்புலிங்கச்
செல்வரைப்பூத்தத் தேவிஅகிலாண்டவளே. 1

ஆருடனேசொல்லி யழுவேன்முறையிடுவேன்
சீருடனேவாழ்வார் சிரிப்பார்முகம்பாரார்
வீருடனேசென்றவரை வெட்டித்தரித்திடுவை
காருடனேநின்ற காவுஅகிலாண்டவளே. 2

வையஞ்சலிக்க மனஞ்சலிக்கயான் சலிக்க
மெய்யுஞ்சலிக்க விதிசலிக்கமதிசலிக்க [லரை
பொய்யுஞ்சலிக்கவுன்னைப்போற்றினின்றேன்முண்ட
கையுஞ்சலித்ததம்மா காவுஅகிலாண்டவளே. 3

வார்த்தைக்கோகீர்த்திக்கோ மண்மேற்பிறந்ததுவும்
ஆத்துக்குட்கோரை யலைவதுபோலாவேனோ

சோத்துக்கோநின்றடிமை செனனமினிநீக்கி
காத்துக்கோநெல்வயல்சூழ் காவுவகிலாண்டவளே.

ஆனாலுமென்றுயர மலைகடலிற்றுரும்பதுபோல்
தானாகவெண்ணுமெண்ணந் தாயேநீயறியாயோ
மீனனமாயன் சகோதரியேசுந்தரியே
தேனுறும்சம்புலிங்கர் தேவியகிலாண்டவளே. 5

தாமரையின்றண்ணீர்போற் றயங்கிமனமேகலங்கி
யேமாந்துநானிருக்க விதுஞாயமோதாயே
காமன்றனைக்காய்ந்து கரியுரித்தோனிடமமர்ந்த
கோமளமேகாவுவளர் கோதையகிலாண்டவளே. 6

போதுக்குப்போதுமனம் புண்ணுகிஎண்ணிஎண்ணி
யேதுக்குவீணனுக்கு விந்தவிதிவந்ததம்மா
மாதுக்குள்மாதடியாள் வாய்விட்டழுதகுரல்
காதுக்குக்கேட்கிலையோ காவுவகிலாண்டவளே. 7

நாட்டிலேசென்மித்து நானொருபெண்பட்டசலம்
யேட்டிலடக்கியெழுதப்படாதுஅம்மா
வாட்டிகொடுங்காலன் வலைவீசும்போதிலென்னை
காட்டிக்கொடாதேயம்மா காவுவகிலாண்டவளே.

அருமையோவென்கவலை யாற்றுவதுனக்கரிதோ
தெரியாமற்கற்சிலையைத் தெய்வமென்றுநம்பினனோ
பரியாயநோக்கிப் பலனுலவுவாயெளிய
கரியோனைப்பெற்றெடுத்த காவுவகிலாண்டவளே. 9

உன்னைவிட வேறெனக்கிங் குற்றதுணைவேறுமுண்
இன்னிலத்தில்வாடியிருப்பதுனக்கழகோ [டோ
பன்னரியவேதப் பழம்பொருளேபங்கயத்தி
னன்னமேதென்காவு வாழுமகிலாண்டவளே. 10

விரிஞ்சன்முதல்தேவர்களு மேலானபொன்னுலகு
மரியபலவுயிரனைத்து மாக்கியளித்தருளு
மிரவியேஞாவிளக்கேயெழிலமுத
வரிவையேகாவுவளரம்மையகிலாண்டவளே. 11

மக்கள்கல்விப்பொருளால்வல்லவராசிப்புவியில்
மிக்கபுகழடைந்து மேவுவதுநின்மகிமை
சொக்கப்பசுங்கிளியேசோதியேகொன்றையுட
னக்கரவம்பூண்டவர்பா லமர்ந்தவகிலாண்டவளே.

அகிலாண்டேஸ்வரிபதிகம்

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

திருவானைக்காவின் திவ்விய சரித்திரம்.

சோழநாட்டின்கண் ணிராநின்ற திரிசிரபுரம்காவேரிநதியின் மத்தியிலிருக்குஞ்சந்திர புஷ்கரணிக்கு அடுத்திருந்த ஒருவனத்தில் வெண்ணாவல் மரத்தின் கீழ்சுயம்புமூர்த்தியாய் விளங்காநின்றசிவலிங்கப்பெருமானுக்கு அந்தவனத்தில் சஞ்சரித்த ஒரு யானை யானதுபூர்வபுண்ய வசத்தினால் நாடோறும் பூசை செய்துகொண்டிருந்த காரணத்தினால் அந்தவனத்துக்குத் திருவானைக்காவென்று பெயருண்டாகியது அப்படியிருக்க முன்செய்த தவக்குறையினால் ஒரு சிலந்திப்பூச்சியானது சிவனேசங்கொண்டு அந்தச் சிவலிங்கப் பெருமான் திருமேனியில் சருகுதிரா வண்ணம்வெல்வி மானங் கட்டியதுபோலத் தன் வாய்நூலினால் கூடுகட்டியிருந்தது மறுநாள் பூசை செய்யவந்தயானை அதனைக் கண்டு இது அனுச்சிதமென்று சிதைத்துவிட்டது சிலந்தியானது மறுபடியும் அவ்வாறேசெய்திருக்க யானை மறுநாளும் அதனைச்சிதைத்து விட்டது சிலந்தியானது சிவலிங்கப்

பெருமானுடைய திருமேனியின் மேல் சருகுவிழா வண்ணம் நான் செய்திருப்பதை யிந்தயானை அடிக்கடி சிதைத்து விடலாமோ வென்று அதனது துதிக்கையுள் நுழைந்து கடித்தவளவில் யானையானது தன் துதிக்கையை நிலத்தில் மோதி இறக்கச்சிலம்பியுமிறந்தது அப்போது பரமசிவம்யானைக்குப்பதவி கொடுத்துச் சிலந்தியைப்பார்த்து சோழர்குலத்திற் பிறந்து அரசாட்சிசெய்யும்படி திருவருள்செய்திட அந்தச்சிலந்தியானது சுபதேவனென்னும் சோழராசனுடைய மனைவியாகிய கமலவதிதிருவயிற்றில் சிசுவாய்த்தங்கிப் பத்துமாதமும் நிறைந்து புத்திரனையவதரிக்குஞ்சமயத்தில் இன்னமும் ஒருநாழிகைக் கழித்து இந்தக்குழந்தைபிறக்குமாகில் திரிலோகங்களையும் ஆளுமென்று சோதிடர்கள்சொல்ல அப்படியானால் அந்த ஒருநாழிகைவரைக்கும் தன்னிரண்டு காலையும் மேலே தூக்கிக் கட்டிவையுங்களென்று கமலவதிசொல்ல அவ்வாறேசெய்து மேற்சொல்லிய காலம்வந்தபோது அக்கட்டினை அவிழ்த்துவிடக் கமலாவதி குழந்தையப் பெற்றெடுத்து என்கோச் செங்கண்ணனே வென்று சொல்லி உடனே உயிர் நீங்கினள் பின்புசுபதேவ னென்னும் அந்தச்சோழ ராஜன் தன்புத்திரனாகிய அந்தக் குழந்தையைவளர்

த்து சகலசாஸ்திரங்களையும் கற்பித்துமகுடாபிஷேகஞ் செய்து தானதவமியற்றிச்சிவலோகஞ் சேர்ந்தனன் கோச்செங்கட் சோழன்பரமசிவத்தினருளால் முன்பிறப்பையறிந்து அரசாட்சி செய்யும்போது பரமசிவத்துக்கு பெரிய ஆலய மமைக்கவேண்டுமென்கிற தொண்டுபூண்டு தாம் ஆதியில் திருவானைக்காவில் செய்த தொண்டின் செயலையுணர்ந்து அங்கிருக்கும் வெண்ணாவல் மரத்தையுள்ளமைத்துச் சிவாலயங்கட்டித் திருத்தொண்டுசெய்து சிவலிங்கப்பெருமான் உமையவள் சமேதராகும்பொருட்டு இரவும்பகலும் நித்திரைஅன்னாகாரம்இல்லாமல் வருந்தியசோழருடைய பத்திவைராக்கியத்துக்கு அகண்டபரிபூரண சச்சிதானந்த அகிலபுவனமும் நிரைந்த சத்திவடிவாகியபார்வதிதேவியார்மனதிரங்கித் திருவானைக்காவாகிய திவ்வியஸ்தலத்தின்கண்சோழருக்குமுன்புபிரசன்னமாகிஉனக்குவேண்டுவரம்என்ன வென்றுகேழ்க்கத்தாயே இத்தலமும் காவேரியும் சிறப்புப்பெறும்படி இவ்விடம் சிவபெருமான் அருகில்வசிக்கவேண்டுமென்று வேண்டும்வரத்திற்கு மகிழ்ந்து அவ்விடம் சிவபெருமான் உத்தரவுக்கு அம்மன்தவத்திலிருக்க அத்தவத்துக்கிரங்கி வெண்ணாவலில் அமர்ந்து ஜம்புகேஸ்வரர்தரி

சனமாகி அகிலாண்டநாயகியென்று சிவபெருமான் அழைத்து இத்தலப்பெருமைபெறும்படி நாம்வசித்தவிடத்திலே நீயும் இருப்பாயாகவென்று கலியுக தர்மம் உன்னால் நிறைவேற்றுவாயென்றும் அருளிய தின்பேரில் நிலையானவடிவாய்அவ்விடமேதிருக்கோயிற் பெற்றிருந்த அகிலாண்டவல்லி கிருபையால் கோச்செங்கட் சோழரும்பதவியடைந்தனர் அதின் மகத்துமே திருவானைக்கா ஸ்தலபுராணத்தின் மூலமாய் அறிக அதுமுதல் இக்கலியுககாலத்திலும்பத்தியுள்ள மானிடர்களுக்குநனவிலும்கனவிலும்பிரசன்னமாகிஅனேகவரங்களைக்கொடுத்து இடர்களைத்தீர்த்தருளியஅகிலாண்டவல்லியையென்பொல்லாவியாதியாலும் வறுமையாலும் என்வாயில்வந்ததை வரகவியாக உளரி சவுக்கியத்தைப்பெற்றுக்கொண்டபடியால் யாதாமொருவர் பத்தியுடன்பணிந்து கோயில் வலம்வந்து சிரம்முகம்கைகால் அங்கம்பூமியினிடம் படியும்படி தொண்டுசெய்துஅர்ச்சித்தபேர்களுக்குயெண்ணிய யெண்ணம் கைவல்லியப்படுமெனவறிக.

திருவானைக்கா திவ்வியசரித்திரம்.

முற்றிற்று.